FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| juk; :- 13 (2018) | jkpo; | Gsspjjpl;lk; |
|---|---|---|

**பகுதி I**

*01. 1)*

அ) பொங்கி எழுகின்ற அலைமோதிய, நேரியதாகிய மணலை அடுத்த கடற்கரையில் உதிர்ந்த புல்லிய காம்பை உடைய நாவலின் கனி பொருந்திய புறத்தினை உடைய கரியகனியை தம்மினம் என்று மொய்த்த வண்டுகள் அதனைக் கனி எனக்கருதி பல கால்களை உடைய நண்டு கைக்கொண்ட கோட்பாட்டினால் அந்நண்டை விலக்கித் தாம் கனியை பெற்றுக் கொள்ள முடியாதனவாய் யாழோசை போல ஒலிக்கும் மிக்கபூசலை அவ்விடத்தே இரையைத் தேடி வந்த நாரையைக் கண்டு அக்கனியை கைவிட்டு அகன்று நிற்கும் கடற்கரைத் துறை விளங்கிய மாந்தை நகரம் போன்றது இவளது அழகு.

ஆ) 1. முதல் கரு - உரி பொருள் கையாளாப்பட்டுள்ளமை.
முதல் - நெய்தல்
கரு - நண்டு, வண்டு நாவல் மரம், நாரை
உரி - இரங்கல்
2. தோழி கூற்றாக அமைந்துள்ளமை
3. இரங்கல் அகத்திணை ஒழுக்கம் கூறப்பட்டுள்ளமை
4. பெயர் சுட்டாப் பண்பு

agaram.lk

இ) இச்செய்யுளில் உள்ளுறை உவமப் பொருள் அழகுற எடுத்தாளப்பட்டுள்ளது. நாவற்கனி - தலைவி, தும்பி - தோழி, அலவன் - தலைவியிடம் தவறிழைக்கம் தமர், இரைதேர் நாரை - தலைவன்.
கனியை தும்பி மொய்த்தலும் அலவன் பற்றிக் கொள்ள நாரை வரவிட்டது போல தலைவியை தோழி சார்ந்திருப்பதும், தமர் முதலாயினர் இற்செறிப்பத் தலைவன் வரலும் தலைவியின் பெற்றோர் அவளைத் தலைவனுக்கு மணஞ்செய்து கொடுத்து இற் செறிப்பை ஒழித்தார் எனவும் உள்ளுறையுவமம் அணி கொள்ளப்படுகிறது.

(3 x 4 = 12 புள்ளிகள்)

2)

அ) நன்மை விளங்குகின்ற நிலமகள் என்று கூறப்படும் பெண்ணை மணம் பொருந்திய துளசி மாலையைச் சூடும் திருமாலாகிய இராமபிரான் கூடுகின்ற செல்வப்பேற்றினன் காணவந்து சேராதவர்கள் இலங்கையின் அரக்கர்களும் இந்த ஏழு உலகங்களிலும் உள்ள மலைகளும் மதம் நீங்காத எட்டுத்திசை யானைகளும் ஆகும்.

ஆ) நன்மை விளங்குகின்ற நிலமகளை மணம் செய்தவன். மணம் பொருந்திய துளசி மாலையைச் சூடியவன். இராமனது முடிசூட்டு விழாவைக் காண அரக்கர்களும், மலைகளும் எட்டுத்திக்கு யானைகளையும் தவிர உலகிலுள்ள அனைத்தும் காண வந்தன.

இ) முடிசூட்டுவிழா

இலங்கையின் நிருதர், ஏழு உலகங்களிலுமுள்ள மலைகள் எட்டுத்திக்கு யானைகள்

(3 x 4 = 12 புள்ளிகள்)

02.

அ) I. பாறை போன்ற கடினமான நிலத்தை உழுது செய்கின்றமை.

- பயிர்கள் வாழதன் உயிரையே கொடுப்பான்
- அழிவினைக் கண்டு சோர்ந்து போகாது மீண்டும் மிடுக்குடன் முதலில் இருந்து செயற்படுவான் இயற்கையோடு போராடும் மனத்திடம் கொண்டவன்.

II. பொருளணிகள் - உவமை, உருவகம்.

உவமானம் - தங்கநகைகள் தலைக்கனிந்த பெண்கள் கூடிக்குனிந்து கும்மி கொட்டி காதினிக்கப் பாடிக் கவலை மறக்க செல்வது போல.

உவமேயம் - நெல்லுப் பொதி சுமந்து கூத்தாடும்.

பொதுத் தன்மை - அழகிய தோற்றம்.

- ஆட்டத்து மங்கயர் போல ............................

  உவமானம் - ஆட்டத்து மங்கையர்

  உவமேயம் - நெல்லுப்பயிர்

  பொதுத்தன்மை - அழகும், ஆட்டமும்.

  உருவக அணி

  பொற்காசாம் நெல்லுப்பொதி

agaram.lk

III. விளைநிலம் - மழை இல்லாது மிகவும் கடினமானது. அந்நிலத்தில் சப்பாத்தி முள் கூட விளைய மாட்டாது. கலப்பை ஏறமாட்டாது. காளையும் இழுக்காது. நீர்வளம் அற்றது ஆழமான கிணற்றில் இருந்தே நீர் எடுக்க வேண்டும்.

நெற்பயிர் - தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்கள் கூடிக்குனிந்து கும்மி கொட்டி காதனிக்கப்பாடி கவலை மறக்கச் செய்கின்றன. பின் மழை வந்து அழிந்த பின்னர் ஆட்டத்து மங்கையர் போல் நின்ற பயிரகள் பாட்டத்தில் வீழ்ந்து அழிந்து நிற்கின்றன.

IV. நாற்று வாழத் தன் ஆவி வழங்குவான். - இத்தொடரின் மூலம் விவசாயி தன் உயிரைக் கொடுத்து பயிர் விளைவிக்கின்றான். உயிரை விட மேலாக விவசாயத்தை நேசிப்பவன் உழைப்பே உயிர் எனக் கொண்டு வாழ்பவன்.

வானத்தை பார்த்து அயர்ந்து நிற்கும் பழக்கம் அற்றோன் - இயற்கையின் அழிவைக் கண்டு அச்சம் கொள்ளாதவன் எதற்கும் தளர்ந்து போகாத அஞ்சா நெஞ்சம் கொண்ட முயற்சி உடையவன்.

(4 x 4 = 16 புள்ளிகள்)

ஆ)

I. வயல் வெளிகள் நிறைந்தது.
குளங்கள் உண்டு, மகாவலி ஆறு பாய்ந்து நீர்பாச்சும் சிறப்புடையது.
சுற்றிவர வயல்களும் நடுவில் திடல் பகுதியில் குடியிருப்புக்களும் உண்டு, பாடசாலை உண்டு.
பெரிய தென்னை மரம், இலுப்பை மரம் போன்ற மரங்கள் நிறைந்தது வளம் சேர்ப்பது.

II. பெரிய வயல் வெளிகள் சூழ அந்த ஊர் இருந்தாலும் அந்த வயல்கள் அந்த ஊர் மக்களுக்குச் சொந்தமானவை இல்லை. அக்காணிகளுக்குச் சொந்தமானவர்கள் வேறு ஊரில் வாழ்கின்றனர். எவ்வளவு வயல்கள் இருந்தாலும் அவ்வயல்கள் அவர்களுக்குச் சொந்தமானவை அல்ல என்பதை குறிப்பிடுகின்றார்.

III. வெள்ளாமை வெட்டுக் காலத்தில் அவர்கள் வாசச்சவர்க்காரம் போட்டுக் குளிப்பார்கள் இந்தச் சவர்க்காரத் தண்ணீர் கிணற்று நீருடன் சேர்ந்து கிணற்று நீரும் சவர்க்கார மணம் வீசும், இது பவிசு இதற்குக் காரணம் வெள்ளாமை வெட்டுக்காலத்தில் அவர்களிடம் பணபுழக்கம் அதிகமாக இருக்கும் விலை உயர்ந்த வாசைன மிக்க பொருட்களை பயன்படுத்துவார்கள்.

IV. கிழக்குப் பிரதேச விவசாயப்பகுதி மக்களின் பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.
அவர்களின் வழக்கிலுள்ள பழமொழிகளை எடுத்துக் காட்டுகின்றார்.

(4 x 4 = 16 புள்ளிகள்)

03.

அ) பொதுவான வினைசெய்யும் திறன் பற்றி 1ம், 2ம் குறள்களில் குறிப்பிடப்படுகிறது.

- ஆராய்ந்து எண்ணுவதன் முடிவு துணிவே ஆகும். அங்ஙனம் துணிவு பெற்றபின் காலம் தாழ்த்துவது குற்றமாகும்.
- காலத்தை தாழ்த்தி செய்யும் செயல்களைக் காலந்தாழ்த்தியும் காலம் தாழ்த்தாது செய்ய வேண்டிய செயல்களை காலம் தாழ்த்தாது செய்ய வேண்டிய செயல்களை காலம் தாழ்த்தாது செய்தல் வேண்டும்.

ஆ) வலிமை உடையான் செய்யும் திறன் பற்றி 3ஆம், 4ஆம் குறள்களில் குறிப்பிடுகின்றார்.

- செய்யக்கூடிய செயல்களை இயலக்கூடிய வேளையில் செய்து முடிப்பது நல்லது. அது இயலாதவிடத்து முடியக் கூடிய வேளையிலாவது செய்து முடிக்க வேண்டும்.
- செய்யத்தொடங்கிய செயலும் களையத்தொடங்கிய பகையும் இரண்டின் எஞ்சி நிற்கும் பகுதியை ஆராயும் போது அது தீயின் எச்சம் போல மறைந்து நின்று பின் வளர்ந்து கெடுக்கும்.

இ) ஒப்பான் செய்யும் திறன் பற்ற 5ஆம், 6ஆம், 7ஆம் குறள்களில் குறிப்பிடுகின்றார்.

- செயலை செய்யுமிடத்து பொருள் கருவி, காலம், செயல் இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கமின்றி முழுமையாக எண்ணிச் செய்தல் வேண்டும்.
- செயலை முடிக்கும் முறையையும் அதற்கு ஏற்படக் கூடிய தடையையும் அது நிறைவேறிய பின் கிடைக்கும் பயனையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

agaram.lk

ஈ) மெலியான் செய்யும் திறன் 8, 9, 10 குறள்களில் குறிப்பிடுகின்றார்.

- ஒரு செயலாலே வேறோர் செயலினை முடித்துக் கொள்வது மதம் பொழியும் யானையைக் கொண்டு இன்னொரு யானையைப் பிடிப்பது போலாகும்.
- செயலில் ஈடுபடுபவன் நண்பவனுக்கு நன்மை செய்வதிலும் பார்க்க விரைவாகத் தன்பகைவரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.
- ஆளும் இடம் சிறியரான அமைச்சர் தம்மிலும் பார்க்க வலிமை உடையவர்கள் எதிர்த்தபோது தம்மைச் சார்ந்தவர்கள் நடுங்குதல் கண்டு அஞ்சி பின்பு தமக்கு வேண்யதைப் பெறுவதற்குத் தம்மிலும் வலிமையுடையோரைப் பணிந்து பெற்றுக் கொள்வர்.

(4 x 5 = 12 புள்ளிகள்)

04.

அ) வருகை - தூய வேதங்களை அந்தணர்கள் ஓதிவர, மண்டப வாசலில் நின்றவர்கள் நெருக்கமாக விலகிக் கொள்ள, முடிசூட்டு வழாவுக்கு தேவையான மங்கலப் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்தடைந்தார்.
செயலும் - கங்கை நதி முதல் குமரியாறு இறுதியாக உள்ள புனித தீர்த்த நதிகளின் நீரையும் நான்கு கடல்களின் நீரையும் குடங்களில் நிறைத்து வைத்து அக்கினி காரியங்களான ஓமம் முதலியவற்றுக்குப் பொருந்திய எல்லாவற்றையும் செய்து, சிங்காசனத்தையும் உரிய இடத்தில் வைத்து மேலும் வேண்டியவற்றையும் செய்தார்.

ஆ) சோதிடர்கள் முகூர்த்த நேரம் நெருங்கி விட்டது என்ற கூற வசிட்டரின் கட்டளைப்படி சுமந்திரன் தசரத சக்கரவர்த்தியைக் காணாது அங்குள்ளவர்களை வினாவினான். அவர்கள் கூறியதன் படி கைகேயியின் அரண்மனைக்குச் செல்ல அவளின் கட்டளைப்படி இராமனை அழைத்து வரச் சென்றான்.

- இராமபிரானின் மாளிகை சென்று இராமனை வணங்கி உன் சிற்றன்னை ஆகிய கைகேயி தானிருக்கும் இடத்திற்கு உன்னை அழைத்து வருமாறு என்னிடம் சொன்னாள். என்று கூறி அலங்கரிக்கப்பட்ட தேரிலே அரசர்கள் பின்தொடர இசைவாணர்கள் பாட, தேவர்கள் வாழ்த்த பெண்கள் மகிழ்ச்சியுடன் பார்த்து நிற்க அழைத்தச் சென்றான்.

இ)

- இராமன் தேரில் செல்வதைக் கண்ட பெண்கள் ஆரவாரத்துடன் வீதியின் இருபக்கங்களிலும் சூழ்ந்து கொண்டனர்.
- வாசனைப் பொடியையும், பூக்களையும், சந்தனத்தையும் பொன்னையும் தூவ வந்து நாணம் கொண்டு வளைகள் நெகிழ காமநோயால் உண்டான வெப்பத்தை கண்ணீரால் கழுவினார்கள்.
- அழகிய கண்களை உடைய இராமன் பெண்களாகிய நம்மிடத்தில் அன்பு இல்லாதவனாக இருக்கின்றான். அவன் இவ் வுலகனத்தினைக் காப்பதற்குத் தகுதி உடையவன் என்று கூறுதல் பொருந்துமா என்றார்கள்
- அழகிய மேனியை உடைய இந்த இராமன் தேரிலே எல்லா இடங்களிலும் காட்சி தருகின்றான். இராமபிரான் எத்தனை பேரோ? என்று வியப்புடன் சொன்னார்கள்.

ஈ) கைகேயியின் கொடுமையான சொல்லைக்கேட்டு இராமன் ஒளி பொருந்திய மணிமகுடத்தைச் சூடாது நிலைமைகளாகிய. அயோத்திய அரசைத்துறந்து காட்டுக்குச் செல்ல முன்பு பெண்களின் தோள்களாகிய பருத்த மூங்கிலும் கண்கள் என்கின்ற வேலும் செறிந்த பெரிய காட்டிற்குள் புகுந்தான் எனக் கூறுகின்றார்.

பெண்கள் இராமன் மீது கொண்ட காதலால் மன்மதனின் மலர் அம்புகள் புண்ணாகும் படி துளைத்த தமது மென்மையான கொங்கைகளை காம நோயில் உண்டான வெப்பத்தை

(4 x 5 = 20 புள்ளிகள்)

05. அ) மக்களின் துன்பத்தை நீக்க இறைவனிடம் பிரார்த்தனை செய்யும் கருணை மிக்கவர்.

- பாம்பினை வரவழைத்துப் பேசியவர்.
- ஒப்பில்லாத தனிமுதற்தூதர்
- கீர்த்தி மிகு வள்ளல்.
- ஆறாம் ஆண்டில் தகைமை பெற்றவர்.
- ஹலிமா நல்கிய முலைப்பாலை அருந்தியவர்.

ஆ) கருக்கொள்ளல் - ஆதியின் அருளால் முகிலாகிய பிள்ளை தீமையற்ற திசையில் தோன்றி, மலையின் மீது தவழ்ந்து வானத்தின் மீது பொருந்துமாறு நடந்து கால்களினால் விரைவாக ஓடிச்சென்று ஒருங்கு கூடி அலையோடு தழுவி சூல் முதிர்ந்து அழகுற மை மாரி விளங்கியது.

பொழிந்த காட்சி - தலைப்பிள்ளை பெறுவதற்காக தாய்வீடு சென்ற மகள் போல பூமியின் மேலே நெருக்கமாக உலாவி உடலானது பதற்றமடைந்து பயம்மிகுந்து அதிருகின்ற சந்தத்தோடு மின்னி மிகுதியாக வாய்குழறி ஆண்குழந்தை பெற்றெடுத்தது போல மழைநீரைச் சொரிந்தது.

agaram.lk

இ) வாய்க்கால் அணைகள் உடைந்தமை.

- குறிஞ்சி முதலான ஐவகை நிலங்களின் வளங்களும் அடித்துச் செல்லப்பட்டன.
- வீடுகளில் வெள்ளம் புகுந்ததினால் உணவு சமைத்து உண்ண முடியாமல் சிறார்கள், பசியினால் கதறினார்கள்.
- குளிரினால் அனைவரும் நடுங்கி செருப்பை அணுகி இருந்தனர்.
- ஆடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன.
- பசுக்கள் இறந்தன.

ஈ) இறைவனே மறையின் வாழ்வே

- எங்கணும் பரந்து நின்ற குறைவு இலாத பொருளே,
- சோதி குலவிய ஒளியே
- நீதி முறை குறை வற நின்றோனே, முதல்வனே.
- அழிவில்லாது நின்ற செழுஞ்சுடரே

(4 x 5 = 20 புள்ளிகள்)

06. அ) நாட்டுக்குப் பெரும் நலத்தை அளிக்கும் தன்மையது.

- உண்மைப் பொருளைத் தெளிவுற ஆராய்ந்து அதனைப் பிறருக்கு தெளிவுற அறிவுறுத்துவன.
- நினைப்போரது உள்ளத்திலே உவகையோடு கூடிய மனோபாவங்களை உண்டாக்குவன.
- நெஞ்சினை உருக்கிக் கண்ணீர் பொருத்துமாறு செய்வன.

ஆ)

- ➢ கற்றவர்க்கு மட்டும்மன்றி மற்றவர்களுக்குப் பயன்படாமல் இருந்தனவும், தமிழ்மக்களுக்குப் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து உலகத்திலுள்ள ஏனைய மக்கட் தொகுதியினரோடு ஒப்புரவிருத்தி உயர்வினை அளிக்கும். நீர்மையனவுமான சங்கச் செய்யுட்களுள்ளே செறிந்து கிடக்கும் காதல் இன்பத்தையும் வீரமேம்பாட்டையும் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டு இலகுவான மொழியில் அமைந்த இன்னிசைத்தமிழ்ப் பாடல்களால் சொன்னவர். தமிழ் நாடு செய்த தவப்பயனால் உதித்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கின்றார்.
- ➢ உண்மைப் பொருளைத் தெளிவுற ஆராய்தல், ஆராய்ந்தவைகளை பிறருக்குத் தெளிவு பொருத்த அறிவுறுத்தல் நினைப்போர் உள்ளங்களில் உவகையோடு கூடிய மனோ பாவங்களை உண்டாக்குதல், நெஞ்சினையுருக்கி கண்ணீர்துளி பொருத்துமாறு செய்தல் இந்நலமனைத்தும் பாரதி யாரிடத்துக் காணப்படுவதால் அவர் உத்தமபுலவர் என்பதற்கு எட்டுணையேனும் ஐயமில்லை.
- ➢ தாய்நாட்டின் மீதும் தாய்மொழியின் மீதும் பாரதியாருக்குள்ள கரை கடந்த அன்பின் திறத்தை அவரது செய்யுட்கள் காட்டும்.
- ➢ கண்ணனைக் காதலானகக் கொண்டு சிருங்காரம் வீபத்சம், பயாநகம், அற்புதம், ரௌத்திரம் என்னும் இரசங்கள் ஒன்றும் பலவும் பொருந்தி வரப்பாடிய பாடல்கள் கவிச்சுவைவ நுகரவல்லார்க்குத் தெவிட்டாத தெள்ள முதமாவன.
- ➢ கண்ணன் பாட்டில் அவர்காட்டும் ஈடுபாடும் அக்கவிதைத் தொகுதியினை “நெஞ்சினை உருக்கும் நீர்மை சான்றது” என்று கூறுவதும் விதத்து நோக்கத்தக்கன.

இ) கட்டுரையின் பெரும் பகுதி கண்ணன் பாட்டுப் பற்றியதாகவே காணப்படுகின்றது. பாரத நாட்டைப்பற்றிய சில பாடல்களை அலசிய விபுலானந்தர் அந்நாடு தொன்று தொட்டுச் சிவனையும் கண்ணனையும் வழிபட்டதாகக் கூறி கண்ணன் சிவபெருமானில் வேறல்லன் என்ற கருத்தினை முன்வைக்கின்றார். அதைத் தொடர்ந்து அவர் கண்ணன் பாட்டுக் குறித்துச் சற்று விளக்கமாகவும் ஈடுபாட்டுடனும் பேசுகின்றார்.

உ - ம்

கண்ணனைச் சேவகனாகப் பாடிய பாட்டு ஆண்டவனை அடிமைபயாய்க் கொண்ட பேர்கள் இம்மை மறுமைச்சுகத்தைப் பெறுவர் என்பதைக் கூறுகின்றது.

கண்ணனைச் சீடனாகக் கொண்ட பாட்டு ஆண்டவனே நல்ல நிலை உணர்த்தும் ஆசானாவான் என்பதை கூறுகின்றது.

கண்ணனைச் சற்குருவாகப் பாடிய செய்யுள் வாழுகின்ற ஞான மார்க்கத்தை நலம் பெறக்கூறும்.

(6 + 7 + 7 = 20 புள்ளிகள்)



agaram.lk

07. அ)

- செல்லத்துரையனை ஆளுமை மிக்க தலைவனாகச் சித்தரிக்கும் போது அவனே அந்நாவலின் கதாநாயகனாக விளங்குகின்றான்.
- தாழ்ந்த குலத்தில் பிறந்தவனாக இருந்த போதும் திட்டமிட்டு செயலாற்றி வெற்றிகாண்பவன். எடுத்துக் காட்டாக. தேர்தலில் நின்று வெற்றி பெறுவது.
- அனைத்துப் பெண்களும் அவனைக் காதல் கொள்ளும் வசீகரமும் தோற்றமும் ஆளுமையும் கொண்டவனாகச் சித்தரித்துள்ளார்.
  உ - ம் மூன்று பெண்களால் காதலிக்கப்படுபவன் .இறுதியில் வள்ளியை மட்டுமே காதலித்து மணந்து கொள்கின்றான்.
- சமூக விடுதலை நோக்கமுடையனவாகவும் கொடுமைகளைக் கண்டு பொங்கி சமூகத் தலைமைத்துவப் பண்பு கொண்டவனவாகவும் சித்தரித்துள்ளார்.
- ஐந்தாம் வகுப்புப் படித்தவனாயினும் உலக அறிவு உடையவன் கடின உழைப்பாளி. மாதவனது அறிவு பூர்வமான வழி காட்டலையும் நட்பையும் ஏற்றுக் கொண்டு நடக்கின்றான்

ஆ) சாதி அமைப்பு இறுக்கம் பெற்றிருந்த யாழ்ப்பாணச் சமூகத்தில் அச்சாதி அமைப்பினால் மோசமாகப் பாதிக்கப்படும் அனுதாபத்திற்குரிய உயர் சாதிப் பெண்களின் வகைமாதிரிப் பாத்திரமாக சரஸ்வதி என்ற பாத்திரமாக சரஸ்வதி என்ற பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது

- வேளான குலத்தைச் சேர்ந்த முதுகன்னியாகச் சித்தரிக்கப்படுகின்றாள். தகப்பனின் சாதி மதிப்பீடுகளுக்கு உகந்த மாப்பிள்ளை கிடைக்காததினால் திருமணமாகமலே அவள் வாழ்வு கழிகின்றது.
- சாதி இறுக்கமும் முரண்பாடுகளும் மோதலும் நிலவும் சுழலும் அவருடைய காதல் அவர்கள் இருவர் மட்டும் அறிந்த இரகசியமாகப் புதையுண்டு போகின்றது.
- செல்லத்துரையின் மூலம் தான் கர்ப்பமுற்றது எவ்வகையிலும் வெளிப்படுத்தமுடியாத சூழலில் சரஸ்வதி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கின்றாள்.
- நாவலில் இது பிரதான முரண்பாடாகச் சித்தரிக்கப்படாவிட்டாலும் சாதி அமைப்பின் கொடுமையும் குமுறலும் வெளிப்படுதற்கு சரஸ்வதியின் பாத்திரம் உதவுகின்றது.

இ) நன்மை தீமைகளிலும் சாதாரண நேரங்களிலும் ஒருவருக்கொருவர் நெருக்கமான உறவு.

- தாழ்த்தப்பட்ட மக்களுள்ளும் பள்ளர், பறையர் என்ற சமூக ஒற்றுமை உ - ம் செல்லத்துரையனுக்கும் மாதவனுக்கும் இடையில் நட்பு.
- மாதவனின் கூற்றுக்களில் அவர்களின் ஒற்றுமை உணர்வு வெளிப்படுகின்றது. "உங்களுக்குள்ள ஒற்றுமையும், கட்டுப்பாடும் ஏற்பட வேணும் அப்பத்தான் நிலைமையை ஓரளவு சீர்படுத்தலாம். எதிரிகளாய் இருக்கும் மட்டும் உங்களிடையே சிலரை ஆயதமாக்கி மற்றவர் மேல் பாயவிடுவார்கள்"
- தீர்த்தத் திருவிழாவில் பள்ளர் சமூகம் ஒன்றாகச் சேர்த்து அமைதி காத்தல்
- நல்லானின் மரணச் செய்தி கேட்டதும் அனைவரும் கோயிலை விட்டு அகன்றமை.
- பொன்னம்பலவாணர் இறந்த போது பறையர் குடிமை மேளம் கொட்ட ஒட்டு மொத்தமாக மறுத்தல்.

(6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

08. அ) மணி பல்லவத்துக்குச் சென்ற மணிமேகலை புத்தபீடிகைகைய வணங்கி தனது பழம் பிறப்பு உணர்ந்த நிலையில் நிகழ்த்திய அறப்போதனைகள்.

- விலங்கு, நரகர், பேய்கள் ஆகிய தீய பிறவிகளை ஆக்கும் தீய வினைகளை நீக்குதல் வேண்டும். "கலங்கஞர்த்தீவினை......"
- தேவர், மக்கள், பிரமர் ஆகிய சிறந்த பிறவிகளைத் தரும் நல்வினைளைத் தவறாது கடைப்பிடியுங்கள்.
  "நல்வினை அயராது ஓம்புமின்......"
- பொய் இல்லா ஞானியின் (புத்தபெருமான்) அறிவுரைகளைச் செவிமடுக்காதவர்கள் பிறவித் துன்பத்தில் அழுந்துவர்.
- தடுத்தற்கரிய கூற்றுவனின் வருகைக்கு முன்னதாகவே அறத்தை செய்தல் வேண்டும்.

ஆ) பழைய யுகத்தின் பிரதிநிதியான கௌரிப்பாட்டி புதிய யுகத்தின் வரவேற்பாளராக மாறுவதன் ஊடாக முற்போக்கு சிந்தனை வெளிப்படுகின்றது.

- கீதா விதவையானதன் பின் உபாத்தியார் பயிற்சிக்கு அனுப்புவதற்கு அம்மா பிள்ளையான கணேசய்யர் தயங்கிய போது தாயான கௌரிப் பாட்டியின் விருப்பப்படி அனுப்பி வைத்தார். இங்கு பாட்டியின் முற்போக்கு சிந்தனை வெளிப்படுகின்றது.
- கீதா மறுமணம் செய்வதையறிந்து கோபப்பட்டு மறுக்கும் போது அவளை ஆதரித்து அவளுக்காக குரல் கொடுப்பதன் மூலம் விதவைகள் மறுமணம் பற்றிய முற்போக்கு சிந்தனைகளுக்கு பாட்டி ஆதரவு கொடுக்கின்றாள்.
- "காலம் மாறும் போது மனுஷாளும் மாறனும் என்ற பாட்டியின் கூற்றினூடாக கால மாற்றத்திற்கான முற்போக்குச் சிந்தனை வெளிப்படுகின்றது.
- இறுதியில் வேலாயுதத்தைக் கண்டதும் "இனிமேல் இவனுக்கு இங்கு என்ன வேலை உலகத்தில் என்னென்னமோ மாறுகிறது நான் ஒரு நாவிதனைக் கூட மாற்றக் கூடாதா? என்ற எண்ணச் சிரிப்பு காலமாற்றத்திற்கான முற்போக்குச் சிந்தனையை எடுத்துக் காட்டுகிறது.

agaram.lk

இ) நாகபட்டினத்துக் காத்தான் சத்திரத்தை பாடும் இடத்து காளமேகப் புலவர் நிந்தையாகவும் துதியாகவும் பாடுகின்றார்.

பாடல் - கத்துகடல் சூழ் நாகைக் காத்தான் சத்திரத்தில் .....

நிந்தை - காத்தானுடைய சத்திரத்தில் உணவு உண்ணச் சென்றால் மாலையில் அரிசி வரும், அதனை உலையில் இட வெள்ளி எழும் என காலதாமதமாக உணவு அளிப்பதனை நிந்தையாகப் பாடியுள்ளார்.

துதி - காத்தானுடைய சத்திரத்தில் அடுத்த நாள் உணவு கொடுப்பதற்கான அரிசி முதல் நாள் மாலைப் பொழுதிலேயே வந்து விடும், ஊர் உங்கும் போது, உலைவைப்பார்கள் அன்றைய நாளுக்கான உணவு விடி வெள்ளி எழும் போதே இலையில் இடப்பட்டு விடும் எனத்துதியாகப் பாடுகின்றனர்.

ஈ) சூரியனைத் தலைவனாகவும் சூரியகாந்திப் பூவையும், தாமரைப் பூவையும் பெண்ணாக உருவகித்து ஆண், பெண் காதல் உறவினைக் கற்பனையாகப் பாடியுள்ளார்.

- இயல்பிலேயே சூரியன் செல்லும் திசையை நாடி மலர்ந்து மாலையில் வாடும் அன்பினால் தான் அவ்வாறு இருப்பதாகக் கற்பனை.
- சூரியனைப் பார்ப்பதற்கும் அதனைக் கவர்வதற்காகவும் மஞ்சள் பூமி அழகுபடுத்துவதாகக் கற்பனை. இதனைத் தாமரைப்பூ பார்தா சிரிபானா ஏளனம் செய்வாளா என வினாவுதல். இதனால் தாமரை மருக்கும் சூரியன் மணவாளன் எனக் குறிப்பிடல்.
- சூரியன் எறிக்கையில் உண்டாகும். வெம்மையினால் அது காய்வதாகவும் அதனைக் கண்டு மனம் இரங்கவில்லை? எனக் கேட்பதும் சூரியன் உனது கணவன் ஆயின் நீ அவன் செல்லும் திசையைப் பார்த்து நின்றும் அவன் உனக்கு ஒரு பதிலும் கூறவில்லை எனக்கேட்பதும் கற்பனையின் உச்சநிலைகளாகும்.

(6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| juk; :- 13 (2018) | jkpo; - II | Gs;spj;jpl;lk; |
|---|---|---|

01) (அ).

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 6. 4 | 11. 3 | 16. 4 |
| 2. 3 | 7. 1 | 12. 5 | 17. 2 |
| 3. 2 | 8. 2 | 13. 4 | 18. 5 |
| 4. 4 | 9. 4 | 14. 1 | 19. 2 |
| 5. 5 | 10. 2 | 15. 3 | 20. 2 |

(20 x 1 = 20 புள்ளிகள்)

(ஆ)

1. ஒரு சொல்லின் பகுதி பகாப்பதமாக இருந்தால் அது தனிப்பகுதி எனப்படும்.
   உ+ ம் :- சுற்றி வளைத்தார்கள் - சுற்றிவளை
   மரப்பெட்டிகள் - மரப்பெட்டி

2. தமிழில் வல்லின மெய்எழுத்துக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளை கொண்டு அமைந்துள்ளன. இவ்வாறு இவை வெவ்வேறு ஒலிகளைக் கொண்டு அமைவதை மாற்றொலியின் என்பர். உ+ ம்
   க – பாகல், பங்கம்
   ச – ஆட்சி, மஞ்சு
   ட – தண்டம், ஆட்சி

agaram.lk

3. என என்று என்பது, என்ற போன்ற இடைச்சொற்களாலே ஆக்கப்படும் தொடர்கள் நிரப்பித் தொடர்கள் எனப்படுகின்றன. உ+ ம்
   “சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்” என காந்தியடிகள் கூறினார்.
   “நீ கவனமாகப் படித்தால் சித்தியடைவாய்” என்று ஆசிரியர் கூறினார்.

4. முன்னிலையில் உள்ளோரை ஒரு செயலை செய்யுமாறு ஏவுவதற்கு உடன்பாடகவோ, எதிர்மறையாகவோ பயன்படும் வினை ஏவல் வினையாகும். இவ் ஏவல் வினைமுற்று ஏவல் ஒருமை, ஏவல் பன்மை என இருவகைப்படும்.
   எதிர்மறை ஏவல் பன்மை - உ+ ம் :- செய்யாதீர்கள்
   போகாதீர்கள்

5. ஐயம் - அவர் வருவாரோ தெரியாது.
   நேற்று அவர் ஊருக்கு போனாரோ
   ஒழியிசை – நீ படிக்கவோ வந்தாய்

(5 x 2 =10 புள்ளிகள்)

02) (அ) மனிதன் ஒரு இயந்திரம் அல்ல. ஒரு பண்பாட்டின் உற்பத்தி அவன் தன் வாழ்வில், பல கருத்துக்களைப் பொறிந்துள்ளான். அக்கருத்து வெளிப்பாட்டு சாதனம் மொழி. மொழியும் பண்பாடும் பிரிக்க முடியாதது. பண்பாட்டோடு நாகரிகமும் வளர்ந்து கொண்டு வருகிறது. இன்றைய நிலையில் விஞ்ஞானம் அழகியற்கலை வளர்ச்சியே சமூக வளர்ச்சி ஆகும். எனினும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த மொழியே மிகவும் அவசியமானது.

(ஆ).

I. தீமைகலவாத நன்மையே நிறைந்துள்ள சமுதாயம் உலகில் எப்பொழுதும் இருந்ததில்லை. இனி இருக்கப்போவதும் இல்லை. நலம், கேடு ஆகிய .ரண்டு இயல்புகளும் கலக்கப் பெற்றதே சமூகம்.

II. நல்லசமூகம் என்பதில் நலன்கள் அதிகமாக இருக்கின்றன. கேடுகள் குறைந்திருக்கின்றன. கெட்ட சமூகம் என்பதில் தீமைகள் நிறைந்து நலங்கள் குறைந்து விடுகின்றன.

III. கடைத்தரமானவன்
துறவி
சமூகச் சீர்திருத்தக்காரன்

IV. தரத்தில் மேலானவன் - துறவி
அவனிலும் மேலானவன் - சமூகசீர்திருத்தக்காரன்

V. தன்னுடைய சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பான் உலகிலுள்ள நலமும் கேடும் அவனுக்கு தென்படுவதில்லை. தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலேயே அவன் எண்ணம் வைத்தவனாய் இருக்கின்றான்.

(5 x 2 =10 புள்ளிகள்)

03) (அ) மனித வரலாற்றுக் கண்டுபிடிப்புக்களில் மிகவும் சிறந்தது மொழி.

- இது கருத்துப்பரிமாற்ற ஊடகம், சிந்தனையின் சிறந்த கருவி.
- மொழிபண்பாட்டினை வெளிப்படுத்தும் மொழி பண்பாட்டின் கண்ணாடி.
- பண்பாட்டு வளர்ச்சியில் மொழியின் செல்வாக்கு அதிகம்.
- சமூக வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, மொழி வளர்ச்சி என்பன ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன.
- மொழி என்பது பண்பாட்டுக்காவி – சமூக விழுமியங்கள், ஆன்மீகச் சிந்தனைகள் அரசியல் முதலான அனைத்தும் அடுத்த சந்ததிக்குக் கையளிக்கப்படுவது மொழியினாலே தான்

(ஆ) ஆரோக்கிய வாழ்வும் சமூக மேம்பாடும்.

- ஆரோக்கியம் என்றால் என்ன அதனால் சமூகமேம்பாடு எவ்வாறு வளர்கிறது.
- ஆரோக்கிய வாழ்விற்கு நாம் செய்ய வேண்டியவை எவை.
- ஆரோக்கியம் பேணாவிட்டால் எமக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.
- ஆரோக்கியம் பேணுவதனால் ஏற்படும் நன்மைகள் அதனால் எவ்வாறு சமூகம் மேம்படுகின்றது.
- ஆரோக்கிய வாழ்விற்கும் சடுக மேம்பாட்டிற்கும் அரசம், தனியார் நிறுவனம், சமூக தொண்டர் நிறுவனங்களும் அளிக்கும் பங்களிப்புகள் எடுத்துக்காட்டாக – குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், உடல் உளவள ஆரோக்கிய நிலையங்கள் போன்வற்றின் பங்களிப்பு.

(இ) கற்றல் செயற்பாட்டில் நேரமுகாமைத்துவமும் திட்டமிடலும்

- நேரமுகாமைத்துவம் என்றால் என்ன. அது கற்றலில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது.
- நேரமுகாமைத்துவத்தைப் பேணாவிட்டால் கற்றலில் ஏற்படும் சிக்கல், விரயம், சிரமம்.
- பாடசாலைக் கற்றலில் நேரமுகாமைத்துவம் எவ்வாறு பேணப்படுகின்றது. அவ்வாறு பேணுவதற்கு கல்வித்திணைக்களங்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள்.
- தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றலில் பேணப்படும் நேர முகாமைத்துவமும் அதற்குரிய சட்டஒழுங்கு.
- இவை பற்றிய நன்மை, தீமை, அறிவுறுத்தல், சட்டங்கள்.

(ஈ) பசுமைப்புரட்சி செய்வோம்.

- பசுமைப்புரட்சி என்றால் என்ன?
- பசுமைப் புரட்சியினை எவ்வாறு செய்யலாம் - தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல்.
- பசுமைப் புரட்சியின் மூலம் நாடும், மக்களும் அடையும் நன்மைகள்
- பசுமைப்புரட்சிக்காக அரசாங்கம் செய்யும் திட்டங்கள்
- விவசாயத்தின், வேளாண்மையின் அன்றைய நிலை, இன்றைய நிலை
- இது பற்றி ஏனைய அறிஞர்களின் கருத்து. (20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி - II

04) (அ) சங்ககால அகத்திணை நூல்கள் :- குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை

➢ அகத்திணை மரபின் முக்கிய அம்சங்கள்.

1. காதலை அடிப்படை பொருளாக கொண்டிருத்தல்.
2. அன்பின் ஐந்திணை – ஐவகை நிலமும் பண்பாடும் ஒழுக்கமும்.
3. கைக்கிளை, பெருந்திணைப்பாகுபாடு
4. முதல், கரு, உரிப்பொருள் பண்பாடு.
5. சுட்டி ஒருவர் பெயர் கூறாமை.
6. பாத்திரங்களின் கூற்றாக அமைதல்.

(ஆ) ஒரு பாத்திரம் தான் கூறவிரும்பும் தகவலை வெளிப்படையாகக் கூறாமல் இயற்கை நிகழ்வுகள், நடத்தைகளை விபரிப்பதன் மூலம் குறிப்பால் உணர்த்துதல், உள்ளுறை உவமம் எனப்படும்.

உவமை வெளிப்படையாக அன்றி உள் உறைத்திருத்தல் என்பது இதன் பொருள்.

➢ அகத்திணைப் பாடல்களில் உள்ளுறை உரமம் தலைவனுடைய இயல்பைச் சுட்டுவதற்கு தலைவனுக்கு அறிவுறுத்துவதற்கும் பெரிதும் பயன்படுகின்றது. உள்ளுறை உவமம் பெரும்பாலும் அந்நிலத்துக்குரிய கருப்பொருளை அடிப்படையாக கொண்டிருக்கும்.

➢ உ –ம் "புனவன் துடவை"………… எனும்பாடலில் கடவுளுக்கு நேர்ந்துவிட்ட தினைக்கதிரை உண்டு விட்டு நடுங்கும் மயில் பற்றி கூறப்படுகின்றது. இது அறியாமல் செய்த பிழைக்கு தண்டனை அனுபவிப்பதை குறிக்கின்றது. இதுபோல தலைவனும் தவறு செய்வானாயின் தெய்வத்தின் பழிக்கு தண்டனைக்கு ஆளாவான் எனும் செய்தி குறிப்பிடப்படுகிறது.

(இ) அகமும் புறமும் விரவிய நூல்கள் - பரிபாடல், பட்டினப்பாலை பரிபாடல் - பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களில் ஒன்றாக இடம்பெறுவது. அகம், புறம் என இரு திணைகளும் கலந்து பாடப்பட்டுள்ளது. பரிந்து வரும் இசைப்பாடல்களால் ஆன பாவகை பரிபாட்டு எனப்படும். இதில் 710 பாடல்களில் 22 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. இவற்றில் வையை பற்றிய 8 பாடல்களிலும் அகம் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. திருமால், செவ்வேள் பற்றிய 14 பாடல்களும் இறைவனைப் பற்றிய பாடல்களாக காணப்படுகின்றன. பண்டைத் தமிழர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வினையும் இயற்கைப் பொருட்களை இறைவனாகவே கண்டு வழிபடும் சிறப்பினையும் இலக்கியம் வெளிப்படுத்துகின்றது.

பட்டினப் பாலை - இது நெய்தல் நிலமான காவிரிப்பூம் பட்டினத்தை சிறப்பித்துப் பாடுகின்றது. இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். – கடல் சூழ்ந்த காவிரிப் பூம்பட்டினத்தையும் சேரமன்னின் வீரம், வெற்றி முதலானவற்றையும் பாடியதால் புறத்திணையாகவும் மேலும் 301 வரிகளையுடைய இப்பாடலில் 5 வரிகள் மட்டுமே அகத்திணைக் கருத்துக்களை கூறி அகமும் புறமும் கலந்த நூலாக காணப்படுகின்றது.

(3 x 5 =15 புள்ளிகள்)

05) (அ)

➢ பல்லவர் காலத்தின் பக்தி நெறிக்கு கால்கோள் இடப்பட்டது. சங்கமருவிய காலபிற்பகுதியாகும். சைவ பக்திக்கு அம்மையாரும் வைஷ்ணபக்தி முதல் மூவாழ்வார்களும் இதில் பங்கு கொண்டனர்.

➢ பல்லவர்

➢ பல்லவ மன்னர்களின் சமயப் பொறை உடைகையினால் சைவ வைஷ்ணவ மதங்கள் வளர்வதற்கு ஆதரவு அளித்தமை

➢ பல்லவ மன்னர்கள் கட்டடக்கலையில் வல்லமை பெற்றமையால் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. அவற்றை மையமாகக் கொண்டு பக்தி இலக்கியங்கள் தோன்றின.

➢ சங்கமருவிய காலத்தில் தோன்றிய சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக சைவ வைஷ்ண போட்டி இட்டு வளர வேண்டிய காரணத்தினால் பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. பல்லவர் கால பக்திப் பாடல்கள் விருத்தயாப்பில் இடம் பெற்றுள்ளன. இவ்விருத்தப்பா யாப்பினை ஆரம்பித்து வைத்தவர் காரைக்கால் அம்மையார் ஆவார். எனவே பக்தியின் ஊற்றாக இருந்தது சங்க மருவிய காலம் ஆகும்.

agaram.lk

- பல்லவர் கால பக்தி இலக்கியங்கள் பதிக அமைப்பில் அமைந்திருந்தன. இப்பதிக அமைப்பிற் வழிகாட்டியாக இருந்தவர் அம்மையார். உதாரணம் அவரது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்.
- இறைவனின் அருவுருவத் தோற்றத்தைப் பாடும் மரபிற்கு வித்திட்டவர் அம்மையாரும் மூவாழ்வார்களும் ஆவார்.

(ஆ) **வைஷ்ணவ பக்தி இலக்கியங்கள் ஆசிரியர்**

- திருப்பாவை, நாச்சியார் திருமொழி - ஆண்டாள்
- திருமாலை, திருப்பள்ளி எழுச்சி - தொண்டரடிப் பொடியாழ்வார்
- திருவெழு கூற்றிருக்கை - திருமங்கையாழ்வார்.
  திருக்குறுந்தாண்டகம்
  திருக்குறுந்தாண்டகம், பெரிய திருமடல்
  பெரிய திரு மொழி, சிறிய திருமடல்
- திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி – பெரியாழ்வார்.
- பெருமாள் திருமொழி - குலசேகர ஆழ்வார் திருவாய் மொழி
- திருவிருத்தம், திரு வாசியம், பெரிய திருவந்தாதி – நம்மாழ்வார் திருவாய் மொழி
- கண்ணின் நுண் சிறுதாம்பு எனத் தொடங்கும் பதிகம் - மதுரகவியாழ்வார்.
- நான்முகன் திருவந்தாதி - திருமாலிசையாழ்வார்.
  திருச்சந்த விருத்தம்
- அமலன் ஆதி பிரான் எனத் தொடங்கும் பதிகம் - திருப்பாணாழ்வார்.

(இ) வைஷ்ணவ பக்தி இலக்கிய மரபில் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் நாலாயிரம் திவ்ய பிரபந்தங்கள் எனப்படுகின்றன. இதில் நாலாயிரம் பனுபல்களும் பெரியாழ்வார் பாடிய பாடல்கள் 473 ஆகும்.

- கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் (வளர்ப்புத் தாய் யசோதை) பாவனை செய்து வாத்சல்ய பாவ ரசம் தோன்றப் பாடியுள்ளார்.
- இது பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.
- அத்துடன் பிற்காலத்தில் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள் தோன்றுவதற்கும் இவரின் கண்ணனைப் பற்றிய பாடல்களே முன்னோடியாக விளங்குகிறது.
- திருமாலைப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்திப் பாடிய இவரது திருப்பல்லாண்டு எனும் இலக்கியம் திருப்பல்லாண்டு எனும் இலக்கிய மரபு தோன்றக் காரணமாகியது.
- கண்ணனின் திரு அவதாரச்சிறப்பு, கண்ணனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் திருத்தாலாட்டு, கண்ணனை முலையிலுண்ண அழைத்தல், காக்கையை குழல் வார அழைத்தல், இராம அவதாரச் சிறப்புகள் என பலவிதமாகப் பக்தி ரசம் சொட்டும் திருப்பனுவல்களால் தமிழ் மொழியை அலங்கரித்தவர்.

(3 x 5 = 15 புள்ளிகள்)

06) (அ) நாயக்கர் காலம் சிற்றிலக்கிய காலம் என சிறப்பிக்கப்படும் வகையில் பெருமளவான பிரபந்த இலக்கியங்கள் தோன்றின அவையாவன.

1. பரணி – மோகவதைப் பரணி, பாசவரைப்பரணி, அஞ்சைவதைப்பரணி
2. உலா – திருவாரூருலா, திருக்களத்திநாதருலா, ஏகம்பநாதர் உலா மதுரைச் சொக்க நாதர் உலா
3. கலம்பகம் - மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம், தில்லைக்கலம்பகம், கச்சிக் கலம்பகம்.
4. பிள்ளைத் தமிழ் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்.
5. நான்மணி மாலை – நால்வர் நான்மணிமாலை, திருவாரூர் நான் மணிமாலை.
6. மும் மணிக்கோவை – பண்டாரமும் மணிக்கோவை, சிதம்பரமும்மணிக் கோவை.
7. தூது சிவஞானபாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது

(ஆ) வசைக்கவியாகப்பாடும் பண்பு – உ-ம் காளமேகப் புலவர் பாடல்கள்

- வெளிப்படையாகவே விமர்சிக்கும் பண்பு.
  உ – ம் :- சுருக்க விழ்ந்த முன் குடுமிச் சோழியா………………
  புராதனமான புலவீர்கள்
- வித்துவச் செருக்கு மிக்க பாடல்கள் - பிறரால் புரிந்து கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் முடியாத வகையில் பாடினர்.
  உ – ம் :- மரமது மரத்தில் ஏறி ……………..

- சொல் அலங்கார அணிகளான யமகம், மடக்கு, சிலேடை போன்ற அணிகள் பயன்படுத்தப்பட்டன.
- ஓசை நயம் மிக்கவனாய் அமைந்திருந்தன்.
- எள்ளாலும் கிண்டலும் கேலியும் உடையவனாய் அமைந்திருந்தன.
- தத்துவச் செருக்கு மிக்கவனாகக் காணப்பட்டன.

(இ) பொது மக்கட் சார்பான இலக்கியம் பற்றியஅறிமுகம்.
பள்ளு – முக்கூடற்பள்ளு
குறவஞ்சி – குற்றாலக் குறவஞ்சி
அம்மானை
கீர்த்தனை - இராம நாடக கீர்த்தனை
நொண்டி நாடகம் - சீதக்காதி நொண்டி நாடகம்.
இவை நாடகப் பாங்கு மிக்கவையாகக் காணப்பட்டன.
இசைப்பாங்கு மிக்கவையாகக் காணப்பட்டன.
நகைச்சுவை உடையனவாகக் காணப்பட்டன.
சமயத்தைப் பொதுமக்கள் மயப்படுத்தல்.
அடிநிலை மக்களது வாழ்க்கையைப் பிரதிபலித்தல்.

(3 x 5 = 15 புள்ளிகள்)

## பிரிவு "ஆ"

07) (அ) சைவ சமயச்சார்பான நூல்கள் - பிள்ளையார் புராணம், ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம்.
கிறிஸ்தவசமயச் சார்பான நூல்கள் - திருச்செல்வர் காவியம், யோசேப்பு புராணம், மருதப்பக்குறவஞ்சி
தலம் சார்ந்தவை – கல்வளை அந்தாதி மறைசை அந்தாதி, புலியூர் யமக அந்தாதி, குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது, வெருகல் சித்திரவேலாயுதர் காதல், இணுவில் சிவகாமியம்மை பிள்ளை தமிழ், வட்டுக்கோட்டை பட்டியம்பதி பத்திரகாளியம்மை பிள்ளை.
உள்ளூர்ப் பிரபுத்துவம் சார்பானவை – கரவைவேலன் கோவை, தண்டிகை கனகராயன் பள்ளு.
வைத்திய நூல் - அமுதகாரம்
சோதிட நூல் - சந்தான தீபிகை
நாடகநூல் - வாளபிமன் நாடகம்
ஆதி ரூபாவதி நாடகம்
கோலவன் நாடகம்
அனுவுருவத்திர நாடகம்.

agaram.lk

(ஆ) சமயச் சார்புடையனவாகக் காணப்பட்டன. இவற்றிலும் சைவசமயச் சார்பு, கிறிஸ்தவ சமயச் சார்புடைய நூல்கள் தோன்றின. சைவ சமய சார்பான நூல்கள் தல புராணம் பற்றியும் விரத மகிமை கூறுவனவாகவும் காணப்பட்டன.
- வைத்தியம், சோதிடம் சார்ந்த நூல்கள் தோன்றின. இவற்றில் குறியீட்டுப் பாங்கும், நாட்டார் இயற்பாங்கும் பேணப்பட்டன.
- சாதாரண அடிநிலை மக்களை சித்தரிப்பனவாகக் காணப்பட்டன.
  உ – ம் பள்ளு, குறவஞ்சி, கோவை
- நாடக இலக்கியங்கள் தோன்றின.
- அகவல் வெண்பா விருத்தம், கலிப்பா போன்ற பாவினங்கள் பேணப்பட்டன.
- வடமொழிச் செல்வாக்கு பேணப்பட்டது.
- இசைப்பாங்கான சொற்களும் சிந்து முதலான இசை வடிவங்களும் பேணப்பட்டன.

(7 + 8 =15 புள்ளிகள்)

08)(அ) அவர் பதிப்பித்த முக்கியமான நூல்கள்
தொல்காப்பியம் - சொல்லதிகாரம் சேனாவரையர்
தொல்காப்பியம் - பொருளதிகாரம்
தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம்
தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நச்சினார்க் கினியம்.
கலித்தொகை
சூளாமணி
வீரசேழியம்
இறையனார்களவியலுரை

(ஆ) மூன்று நாடக நூல்களை எழுதியுள்ளார் - நானாடகம் இருநாடகம், சங்கிலி

- மாணிக்கமாலை – மொழிபெயர்ப்பு நாடகம்
- ஆற்றுகைக்கான மேடை நாடகங்களைத் தந்தமை.
- தமிழர் சமூக, அரசியல் விடயங்களைப் பேசும் நாடகங்கள்.
- யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை பதிவு செய்தமை.
- பல்கலைக்கழக மட்டத்தில் நாடக எழுச்சிக்கான முன்னோடி.
- இயல்பு நெறி நாடகங்கள் மூலம் யாழ்ப்பாணப் பிராந்திய சமுதாய வாழ்வைச் சித்தரித்தமை.
- மாணவர் பரம்பரையை நாடகத்துறையில் ஆற்றப்படுத்தியமை.

(இ) மஹாகவி உருத்திரமூர்த்தி – காலம் (1927 – 1971)
கவிதைத் தொகுதிகள் :- வள்ளி, குறும்பா, வீடும் வெளியும்
காவியங்கள் - ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், மஹாகவியின் ஆறுகாவியங்கள்
பா நாடகங்கள் - கோடை, புதியதொரு வீடு
இசைப்பாடல் - மாநிலத்துப் பெருவாழ்வு
வில்லிசைப்பா – கண்மணியாள் காதை
ஈழத்து நவீன கவிதை மூலவர்
நடைமுறை வாழ்வை யதார்த்த பூர்வமாகச் சித்தரித்தவர்.
பேச்சோசைப் பண்புடன் இலக்கியம் படைக்கும் பண்பு.
சாதாரண மனிதரை நாயகராக்கும் காவியங்கள்
இலங்கையின் முதலாவது கவிதை இதழ் தேன் மொழயின் இணை ஆசிரியர்.

(ஈ) வ.அ.இராசரத்தினம் :- (1925 – 2001) காலம்
250 ற்கு மேற்பட்ட சிறுகதைகள்
150 ற்கு மேற்பட்ட வானொலி நாடகங்கள்
3 மேடை நாடகங்கள், ஏராளமான கட்டுரைகள்
4 நாவல்கள், 3 குறு நாவல்கள் என்பன இவரது படைப்புக்கள்
இவரது முதற்சிறுகதை மழையால் இழந்த காதல்
மிகச்சிறந்த சிறுகதையான தோணி, சிங்களம், மலையாளம், ஆங்கிலம், ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
இவரது சிறந்த சிறுகதைகள் - தையலக்கா, மறைப்பு, வலை உண்ணி அவரசம், கடலின் அக்கரைபோனாரே, சுடலை ஞானம், நம்பிக்கை, தலாக், வீடு, நத்தார் ஓலம், கறுப்பு நாய் வேர்கள், பிறந்த மண், ஓர் ஆலமரத்தின் கதை, பலை, பாசம் தாய், ஆண்மகன்
குறிப்பாக திருகோணமலைப் பிரதேசப் பேச்சுத்தமிழையும் தேவைப்பட்டபோது இலக்கிய தமிழையும் கையாண்டார்.
தோணி (1962) மண்ணின் மைந்தர்கள் (1996) ஆகிய நூல்கள் சாகித்ய மண்டலப் பரிசு பெற்றவை.

(உ) நல்லூர் சின்னத்தம்பி புலவர் :-

- ஒல்லாந்தர் காலம்
- இளமையிலேயே கவிபாடும் வல்லமை
- பலவகையான சிற்றிலக்கியங்கள் பாடியமை.
  கல்வளை யந்தாதி
  மறைசையந்தாதி
  கரவை வேலன் கோவை
  பறாளை விநாயகர் பள்ளு
- "ஈழத்துக் கவிதைச் சொல் நெறியின் ஊற்றுக்கண் " என்று பண்டிதமணி அவர்களால் புகழ்ப்பட்டார்.

(5 x 3 = 15 புள்ளிகள்)

agaram.lk